**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2014–15 ஆம் நிதியாண்டு – 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை, 11 மாவட்டங்களில் புதியதாக துவக்குதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2.1) துறை

அரசாணை (நிலை) எண். 84

நாள்:10–12–2014
ஜய, கார்த்திகை 24,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்3718/ மா.தி.ந.2/14, நாள் 8.1.2014.

---

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், கடந்த 25.7.14 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏனையவற்றுடன், சட்டமன்றப் பேரவையில் பின்வரும் ஒன்றினை அறிவிப்பு செய்துள்ளார்கள்:–

> "தமிழ்நாட்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான தங்கும் வசதி, உணவு மற்றும் தொழிற் பயிற்சியுடன் கூடிய 31 இல்லங்கள் 21 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்கள் மூலம் பெறப்படும் பராமரிப்பு மற்றும் பயிற்சிகள் பயனாளிகளின் பெற்றோர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய பயனாக உள்ளன. எனவே, இந்த இல்லங்களை, மேலும் 11 மாவட்டங்களில் அதாவது தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய ஆறு மாவட்டங்களில், ஆண்களுக்கான ஆறு இல்லங்களையும், விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் பெண்களுக்கான ஐந்து இல்லங்களையும் திறக்க, அரசு முடிவெடுத்து உள்ளது. இதனால், அரசுக்கு ஒரு இல்லத்திற்கு, ஆண்டுக்கு, 9 லட்சத்து 66 ஆயிரத்து 800 ரூபாய் என்ற வீதத்தில் 11 இல்லங்களுக்கு 1 கோடியே 6 லட்சத்து 34 ஆயிரத்து 800 ரூபாய் செலவினம் ஏற்படும்".

2. மேற்படி, மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களில், ஆண்களுக்கான ஆறு இல்லங்களை, தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலும், பெண்களுக்கான ஐந்து இல்லங்களை, விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி

மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும், **2014–15** ஆம் நிதியாண்டில் செயல்படுத்திட அனுமதியும் மற்றும் ஒரு இல்லத்திற்கு, செலவினத் தொகையாக ரூ.**9,66,800/–** வீதம் **11** இல்லங்களுக்கு ரூ.**1,06,34,800/–**ஐ நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, **14** வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான ஆறு இல்லங்களை தருமபுரி, கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலும், **14** வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய பெண்களுக்கான ஐந்து இல்லங்களை விருதுநகர், அரியலூர், திருப்பூர், நீலகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலும், **01.12.2014** முதல் துவக்கிட அனுமதியும் மற்றும் இதற்கான, ஒரு இல்லத்திற்கு நான்கு மாதங்களுக்கான செலவினத் தொகையாக ரூ.**3,55,600/–** வீதம் **11** இல்லங்களுக்கு மொத்தம் ரூ.**39,11,600/–**ஐ (ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து பதினோராயிரத்து அறுநூறு மட்டும்) இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி–**3**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> ‘‘**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்து ஆண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–MG– மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி **–09.** உதவித் தொகை–**01.** நடப்புச் செலவுக்கான உதவித் தொகை’’.
>
> (த.தொ.கு **2235–02–101–**MG**–0914**)

**5. 14** வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை பராமரிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், தகுதிவாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும், இத் தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுக்கவும் மற்றும் நீக்கவும் அரசின் ஒப்புதலை பெற வேண்டும் எனவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**6.** மேலே பத்தி–**3**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புது துணைப் பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வராசணையின் நகலுடன் நிதித்(வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை **2014–15** ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய

நேரத்தில் நிதி(சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண். 66917/நிதி(சந)/2014, நாள்10.12.2014—ன்படி வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1694(ஆயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை—18/35
தலைமைக் கணக்காயர், சென்னை— 18/35 (பெயரில்)

**நகல்:—**
நிதி (சந, வ.செ.பொ.II, வ.செ.பொ.I) துறை, சென்னை—9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை—9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

[அரசாணை(நிலை) எண்.84, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–12–2014]

**14வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய 11 இல்லங்களுக்கான செலவின விவரம் ( 4மாதங்களுக்கு மட்டும்)**

ஒரு இல்லத்திற்கான தொடர் செலவினம்:–

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம் ரூ.6,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | ரூ.24,000/– |
| 2. | காப்பாளர் ரூ.5,000/– x 1 நபர்கள் x 4 மாதங்கள் | ரூ.20,000/– |
| 3. | சமையலர் ரூ.3,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | ரூ.12,000/– |
| 4. | உதவி சமையலர் ரூ.2,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | ரூ.8,000/– |
| 5. | இரவுக் காவலர் ரூ.4,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | ரூ.16,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள் ரூ.6,000/– x 2 நபர்கள் x 4 மாதங்கள் | ரூ.48,000/– |
| 7. | துப்புரவு பணியாளர் ரூ.2,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | ரூ.8,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம் ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 4 மாதங்கள் | ரூ.1,04,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்) ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம் ரூ.13,000/– x 4 மாதங்கள் | ரூ.52,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம் ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.4,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 4 மாதங்கள் | ரூ.6,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள் ரூ.200/– x 40 நபர்கள் | ரூ.8,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள் ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 4 மாதங்கள் | ரூ.3,600/– |
| | **மொத்தம்** | **ரூ.3,55,600/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | ரூ.3,55,600/– |
| 2. | பதினொரு இல்லங்களுக்கான செலவினம் ரூ.3,55,600/– x 11 | **ரூ.39,11,600/–** |

(ரூபாய் முப்பத்து ஒன்பது இலட்சத்து பதினோராயிரத்து அறுநூறு மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.